2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரப் பகுதிகளில், விடுபட்ட இடங்களில்* RMU *அமைக்கக்கூடிய பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. விரைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற பகுதியில்* RMU *அமைக்கக்கூடிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 190, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *சேகர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

190—

மருத்துவமனைக்குக் கட்டடம்

***86653—திரு. S. சேகர்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *பரமத்தி-வேலூர் தொகுதி, பரமத்தி-வேலூர் வட்ட மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *நாமக்கல் மாவட்டம், பரமத்தி-வேலூர் பேரூராட்சியில் 76 படுக்கைகள் வசதியுடன் வட்ட அரசு மருத்துவமனை ஒன்று மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவு, மகப்பேறு பிரிவு, பல் மருத்துவப் பிரிவு, புற நோயாளிகள் பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, நவீன சமையலறை, குளிர்சாதன வசதியுடன்கூடிய பிணவறை, தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவு,* dialysis, *சித்தா பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகள் அங்கே*

இயங்கி வருகின்றன. மேலும், ஆய்வக வசதி, X-ray, ECG, Ultrasonogram வசதி, குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கு போன்ற பல்வேறு வசதிகளும் அந்த மருத்துவமனையில் சிறப்பாக இருக்கின்றன.

இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரிடமும் தலா 10 கோரிக்கைகளைக் கேட்டிருந்தார்கள். மாண்புமிகு மன்ற உறுப்பினர் அவர்கள் தற்போது கேட்டிருக்கக்கூடிய கேள்வி அந்தக் கோரிக்கைகளில் ஒன்று. அதாவது, அவர் சொன்ன மருத்துவமனையை மேம்படுத்திட வேண்டுமென்பது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்கின்ற திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட 10 கோரிக்கைகளில் ஒன்றை அனுமதித்து, அதற்கு 23 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட பன்னோக்கு தீவிர சிகிச்சைப் பிரிவு (Critical Care Block) ஒன்றைக் கட்டுவதற்கு இந்த ஆண்டு மானியக் கோரிக்கையில், நேற்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது, விரைவில் கட்டித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர் அவர்கள்.

திரு. S. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத்தின் பொதுச் செயலாளர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பரமத்தி-வேலூர் பேரூராட்சியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனைக்கு நேற்று Critical Care Block நிறுவப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதியின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 19]

திரு. S. சேகர்: நேற்று Critical Care Block அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக மகிழ்ச்சியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, புற நோயாளிகள் அதாவது வெளி நோயாளிகள் அங்கே வருவதற்கு இடம் போதுமானதாக இல்லை; கூடுதல் கட்டடம் கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, அங்கு செவிலியர்கள் மிகவும் குறைவாக இருக்கின்றனர். அதையும் பூர்த்தி செய்து கொடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர்கள் காலிப் பணியிடங்கள் இருப்பின், அவை உடனடியாகப் பூர்த்தி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், அங்கே கூடுதல் கட்டடங்களையும் கேட்டிருக்கிறார். நிதி வசதிக்கேற்ப இந்த ஆண்டு செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதைப்போல், பரமத்தி-வேலூரில் ஏற்கெனவே முசிறி துணை சுகாதார நிலையக் கட்டடம் ஒன்று ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் தங்களின் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர் அவர்கள்.

திரு. S. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல, மோகனூர் ஒன்றியம், பாலப்பட்டியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 படுக்கைகள் வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேம்படுத்தும் திட்டங்கள் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, வடுகச்சேரி கிராமத்தில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. நாகைமாலி அவர்கள், இந்த ஆண்டின் அவருடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில்—அதற்கான திட்ட மதிப்பீடுகளை நான் உடனடியாகத் தயார் செய்யச் சொல்லி சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் அவரை அணுகச் சொல்கிறேன்—அவர் உடனடியாகப் பரிந்துரை கடிதம் தருவாரேயானால், அங்கு சுற்றுச் சுவர் உடனடியாகக் கட்டித் தரப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. . .* (குறுக்கீடு)

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]